# Balakrishnan Velaiah, IPS

## NEW ARTICLES

## Bomb Blast Reward with CM




# CM honours policemen for swift action, investigation in Coimbatore blast

Chennai, Oct 31: To appreciate the efforts of policemen in Coimbatore for their swift action and investigation in the Coimbatore car blast incident, Chief Minister MK Stalin distributed certificates, at the function held at the Secretariat today.

As a mark of appreciation 58 policemen, including Coimbatore Commissioner V Balakrishnan, were called and given the certificate of appreciation.

"Jamesha Mubeen after seeing the policemen involved in rounds did not proceed further and died in the explosion caused by the cylinder present in the car. Following the incident, the policemen were involved in swift action and investigation which prevented a major catastrophe in Coimbatore." said the state government, in a press communique.

Governor RN Ravi criticised the state government for their delay in handing over the case to NIA and BJP State President K Annamalai criticised the state police and the intelligence wing of the police.

Hitting at Annamalai indirectly, the state government said "the efforts of some persons to create chaos was prevented successfully by the police department and there was no disturbance to the peace for traders and the public on Deepavali. Policemen handled the situation efficiently and within 12 hours of the incident, the special team was directed to investigate the incident and collected 148 pieces of evidence. Five persons linked to the incident were arrested on October 24 and a sixth person was arrested the following day. All six were booked under the Unlawful Activities Prevention Act (UAPA) on October 25 and the tireless work of policemen round the clock is appreciable," the State government said.

## கோவை கார் வெடிப்பு வழக்கில்

# திறம்பட செயல்பட்ட காவலர்களுக்கு முதல்வர் பாராட்டு

சென்னை:

கோயம்புத்தூர் மாநகரில் கார் வெடிப்புச் சம்பவத்தின்போது காவல்துறையால் மேற்கொள்ளப்பட்ட மெச்சத்தகுந்த பணியினை பாராட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காவல்துறையினருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். தமிழ்நாடுமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தலைமைச் செயலகத்தில், கோயம்புத்தூர் மாநகரில் நடந்த கார் வெடிப்பு சம்பவத்தில் சிறப்பானபுலன் விசாரனை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட கோயம்புத்தூர் மாநகர காவல்துறையினரின் நற்செயலைப் பாராட்டி அவர்களை சிறப்பிக்கின்ற வகையில் 58 காவல் அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கிடும் அடையாளமாக 14 காவல்துறை



யினருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். கோவை மாநகரில் கடந்த 23ந்தேதியன்று அதிகாலை உக்கடம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கார் சிலிண்டர் வெடித்த சம்பவத்தினையடுத்து, விரைந்து செயல்பட்ட காவல்துறையினர் அவ்விடத்தில் தடயங்கள் ஏதும் கலைக்கப்பட்டுவிடாமல்கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சம்பவம் நடந்த அன்று அதிகாலை வேளையில் அப்பகுதியில் விழிப்புடன் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினரைக் கண்டவுடன் ஜமேஷா முபினால் மேலும் அவ்வழியே தொடர்ந்து காரைச் செலுத்த இயலவில்லை.

இதனைத் தொடர்ந்து அவ்விடத்திலேயே கார் சிலிண்டர் வெடித்து அவரும் உயிரிழந்தார். அதனை தொடர்ந்து நடத்தப்பட்ட தீவிர விசாரணையின் காரணமாகவும், காவல்துறையினர் விழிப்புடன் பணியாற்றியதன் காரணமாகவும் பெரும் அசம்பாவிதம்கோவைமாநகரில் தவிர்க்கப்பட்டுள்ளது. ஒருசிலநபர்கள் உள்நோக்கத்துடன் பதற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை காவல்துறையினரின் சிறப்பான நடவடிக்கைகளின் காரணமாக தடுக்கப்பட்டு, தீபாவளி பண்டிகையையொட்டி கோவையில் வணிக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் இயல்பு நிலைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் நிலைமை திறம்பட கையாளப்பட்டது.சம்பவம் நடைபெற்ற 12 மணி நேரத்திற்குள் தனிப்படைகள்மூலம்புலன் விசாரணை முடுக்கிவிடப்பட்டு 148 தடயங்கள் சேகரிக்கப்பட்டு,

வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டு, அச்சம்பவம் தொடர்பாக ஐந்து பேர் 24.10.2022 அன்றே கைது செய்யப்பட்டனர். மறுநாள் ஆறாவது நபரும் கைது செய்யப்பட்டார். மேலும், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (யுஏபிஏ) கீழும் நடவடிக்கைகள் அடுத்த தினமே (25.10.2022) மேற்கொள்ளப்பட்டன. இரவும் பகலும் ஓய்வின்றி தன்னலமற்ற வகையில் பணியாற்றி வரும் தமிழ்நாடு காவல்துறையினரின் பணி போற்றத்தக்கதாகும். அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமையாற்றி சமூக அமைதியை நிலைநாட்டும் வண்ணம் சேவையாற்றிய காவல்துறையினரின் இப்பணியைப் பாராட்டி அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் வி. பாலகிருஷ்ணன், இ.கா.ப., உள்ளிட்ட 58 காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கிடும் அடையாளமாக 14 காவல்துறையினருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.இந்நிகழ்வில் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, காவல் துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## கோவை கார் சிலிண்டர் வெடிப்பு வழக்கு

# சிறப்பாக பணிபுரிந்த காவல் துறையினருக்கு பாராட்டு

### ● முதல்வர் ஸ்டாலின் சான்றிதழ் வழங்கினார்

● சென்னை

கோவை கார் சிலிண்டர் வெடிப்பு வழக்கில் சிறப்பாக பணிபுரிந்த காவல் துறையினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

இதுதொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

கோவையில் கடந்த அக். 23-ம் தேதி அதிகாலை, உக்கடம் காவல் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் கார் சிலிண்டர் வெடித்த சம்பவத்தை அடுத்து, விரைவாக செயல்பட்ட காவல் துறையினர், அந்த இடத்தில் தடயங்கள் ஏதும் கலைக்கப்பட்டுவிடாமல், கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அன்று அதிகாலையில் அந்த பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த காவல் துறையினரை கண்டவுடன், ஜமேஷா முபினால் மேலும் அவ்வழியே தொடர்ந்து காரை செலுத்த இயலவில்லை. இதைத் தொடர்ந்து, அந்த இடத்திலேயே கார் சிலிண்டர் வெடித்து, அவரும் உயிரிழந்தார்.

### பெரும் அசம்பாவிதம் தவிர்ப்பு

தொடர்ந்து நடத்தப்பட்ட தீவிர விசாரணையின் காரணமாகவும், காவல் துறையினர் விழிப்புடன் பணியாற்றியதாலும் கோவை மாநகரில் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

சில நபர்கள் உள்நோக்கத்துடன் பதற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் காவல் துறையினரின் சிறப்பான நடவடிக்கை காரணமாக தடுக்கப்பட்டு, தீபாவளி பண்டிகையையொட்டி கோவையில் வணிக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் இயல்பு நிலைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் நிலைமை திறம்பட கையாளப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற 12 மணி நேரத்துக்குள், தனிப்படைகள் மூலம் புலன் விசாரணை முடுக்கிவிடப்பட்டு, 148 தடயங்கள் சேகரிக்கப்பட்டு, வெடி பொருட்கள் கைப்பற்றப்பட்டு, அச்சம்பவம் தொடர்பாக 5 பேர் அக்.24-ம் தேதியே கைது செய்யப்பட்டனர். மறுநாள் 6-வது நபரும் கைதானார்.

### போற்றத்தக்க பணி

மேலும், அடுத்த நாளே சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் ('உபா') கீழும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரவும் பகலும் ஓய்வின்றியும், தன்னலமற்ற வகையிலும் பணியாற்றிய தமிழ்நாடு காவல் துறையினரின் பணி போற்றத்தக்கதாகும்.

அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமையாற்றி, சமூக அமைதியை நிலைநாட்டும் வகையில் சேவையாற்றிய காவல் துறையினரின் பணியைப் பாராட்டி, அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், கோவை மாநகர காவல் ஆணையர் வி.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட 58 காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கும் அடையாளமாக, 14 பேருக்கு சான்றிதழ்களை முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலர் இறையன்பு, டிஜிபி சைலேந்திர பாபு, கூடுதல் டிஜிபி (சட்டம்-ஒழுங்கு) தாமரைக் கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

CAR BLAST CASE

# CM Stalin honours Kovai cops for swift action



Chief Minister MK Stalin at the function to hand over the certificates

**CHENNAI: Chief Minister MK Stalin on Monday lauded the swift action and investigation by Coimbatore police in the car blast incident and handed over certificates to them at the Secretariat. As a mark of appreciating 58 police personnel, including Coimbatore Commissioner V Balakrishnan, 14 of them were called and given the certificate of appreciation.**

"Jamesha Mubeen, after seeing the cops involved in rounds, did not proceed further and died in the explosion caused by the gas cylinders kept in the car. Following the incident, the police were involved in swift action and investigation which prevented a major catastrophe in Coimbatore." said the government communique.

Governor RN Ravi had criticised the State government for their delay in handing over the case to NIA and BJP state president K Annamalai slammed the state police and its intelligence wing.

Hitting out at Annamalai indirectly, the state government said "the efforts of some persons to create chaos were prevented successfully by the police department and there was no disturbance to the peace for traders and the public on Deepavali. Policemen handled the situation efficiently and within 12 hours of the incident, the special team was directed to investigate the incident and collected 148 pieces of evidence.

"Five persons linked to the incident were arrested on October 24 and a sixth person was arrested the following day. All six were booked under the Unlawful Activities Prevention Act (UAPA) on October 25 and the tireless work of policemen round the clock is appreciable," the state government said.

### கோவை கார் வெடிப்பு சம்பவம்:

# சிறப்பாக செயல்பட்ட போலீசாருக்கு பாராட்டு சான்றிதழ்

## முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்




கோவை கார் வெடிப்பு சம்பவத்தில் சிறப்பாக புலன் விசாரணை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட கோவை மாநகர போலீசாருக்கு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கியபோது எடுத்த படம். அருகில் தலைமைச் செயலாளர் இறையன்பு, போலீஸ் டி.ஜி.பி. சைலேந்திரபாபு மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

சென்னை, நவ.1- கோவை கார் வெடிப்பு சம்பவத்தில் சிறப்பான புலன் விசாரணை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட போலீசாருக்குபாராட்டு சான்றிதழ்களை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

### கோவை கார் வெடிப்பு

கோவை கோட்டைமேடு பகுதியில் கடந்த 23-ந் தேதி கார் வெடிப்பு சம்பவம் நடந்தது. இதில் ஜமேஷா முபின் என்பவர் பலியானார். இந்த வழக்கில் போலீசார் 6பேரை கைது செய்தனர். ஜமேஷா முபின் வீட்டில் நடத்திய சோதனையில் 75 கிலோ வெடிமருந்து உள்பட 109 வகையான பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்தசம்பவம்தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், ஜமேஷா முபின் மற்றும்சிலர் 3கோவில்களை தகர்க்க ஒத்திகை பார்த்த அதிர்ச்சி தகவலும் வெளியானது. இந்த நிலையில் அந்த வழக்கு, தேசிய புலனாய்வு முகமைக்கு (என்.ஐ.ஏ.) மாற்றப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக அரசியல் ரீதியாக பரபரப்பு அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. மத்திய அரசு கொடுத்த எச்சரிக்கைக்கு பின்னரும் ஜமேஷா முபினை கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வராமல் தமிழக காவல்துறையின் உளவுத்துறை கோட்டை விட்டதாக தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

இந்தநிலையில் கோவை கார் வெடிப்பில் சம்பந்தப்பட்டபோலீசாரைசென்னை தலைமைச் செயலகத்திற்கு வரவழைத்து, மெச்சத்தக்க பணி மேற்கொண்டதாக அவர்களுக்குபாராட்டுசான்றிதழ்களை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

### கண்காணிப்பு நடவடிக்கை

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

கோவை மாநகரில் கடந்த 23.10.2022 அன்று அதிகாலை உக்கடம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் கார் சிலிண்டர் வெடித்த சம்பவத்தையடுத்து, விரைந்து செயல்பட்ட காவல்துறையினர் அவ்விடத்தில் தடயங்கள் ஏதும் கலைக்கப்பட்டுவிடாமல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சம்பவம் நடந்த அன்று அதிகாலை வேளையில் அப்பகுதியில் விழிப்புடன் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினரை கண்டவுடன் ஜமேஷா முபினால் மேலும் அவ்வழியே தொடர்ந்து காரை செலுத்த இயலவில்லை. இதனைத்தொடர்ந்து அவ்விடத்திலேயே கார் சிலிண்டர் வெடித்து அவரும் உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தீவிர விசாரணையின் காரணமாகவும், காவல்துறையினர் விழிப்புடன் பணியாற்றியதன் காரணமாகவும் பெரும் அசம்பாவிதம் கோவை மாநகரில் தவிர்க்கப்பட்டுள்ளது.

### உள்நோக்கம்

ஒருசில நபர்கள் உள்நோக்கத்துடன் பதற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை காவல்துறையினரின் சிறப்பான நடவடிக்கைகளின் காரணமாக தடுக்கப்பட்டு, தீபாவளி பண்டிகையையொட்டி கோவையில் வணிக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் இயல்பு நிலைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் நிலைமை திறம்பட கையாளப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற 12 மணி நேரத்திற்குள் தனிப்படைகள் மூலம் புலன் விசாரணை முடுக்கிவிடப்பட்டு 148 தடயங்கள் சேகரிக்கப்பட்டு, வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு, அச்சம்பவம் தொடர்பாக 5 பேர் 24.10.2022 அன்றேகைதுசெய்யப்பட்டனர். மறுநாள் 6-வது நபரும் கைது செய்யப்பட்டார்.

மேலும், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (உபா) கீழும் நடவடிக்கைகள் அடுத்த தினமே (25.10.2022) மேற்கொள்ளப்பட்டன.

### மெச்சத்தகுந்த பணி

இரவும் பகலும் ஓய்வின்றி தன்னலமற்ற வகையில் பணியாற்றி வரும் தமிழ்நாடு காவல்துறையினரின் பணி போற்றத்தக்கதாகும். அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமையாற்றி சமூக அமைதியை நிலைநாட்டும் வண்ணம், சிறப்பான புலன் விசாரணை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு சேவையாற்றிய காவல்துறையினரின் மெச்சத்தகுந்த இப்பணியையும் நற்செயலையும் பாராட்டி, அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின், கோவை மாநகர போலீஸ் கமிஷனர் வி.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட 58 போலீஸ் அதிகாரிகள் மற்றும் போலீசாருக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கிடும் அடையாளமாக 14 காவல்துறையினருக்கு பாராட்டு சான்றிதழ்களை 31-ந் தேதி (நேற்று) தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

இந்த நிகழ்வில் தலைமைச் செயலாளர் இறையன்பு, போலீஸ் டி.ஜி.பி. சைலேந்திரபாபு மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## காவல்துறையின் நற்செயலை பாராட்டி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்!



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் 31/10/22 கோயம்புத்தூர் மாநகரில் நடந்த கார் வெடிப்பு சம்பவத்தில் புலன் விசாரணை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட கோயம்புத்தூர் மாநகர காவல் துறையினரின் நற்செயலை பாராட்டி அவர்களை சிறப்பிக்கின்ற வகையில் 58 காவல் அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங் கிடும் அடையாளமாக 14 காவல்துறையினருக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில் தமிழக அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு இ.ஆ.ப, தமிழக காவல்துறை இயக்குனர் முனைவர் செ. சைலேந்திரபாபு இ.கா.ப., மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர். செய்தி:Sரவூப்

### கோவை சம்பவத்தில் சிறப்பான விசாரணை; 58 காவலர்களுக்கு...

# பாராட்டு சான்றிதழ்!

## தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**கோவை சம்பவத்தில் சிறப்பாக விசாரணை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட காவலர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று (31ம் தேதி) பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.**



**சென்னை, அக். 31-** கோவை உக்கடம் கோட்டை ஈஸ்வரன் கோவில் முன்பாக கடந்த 23ம் தேதி அதிகாலை கார் வெடித்துச் சிதறியது. அதில் உக்கடம் ஜி.எம்.நகர் பகுதியை சேர்ந்த ஜமேஷா முபீன் என்பவர் உடல் கருகி உயிரிழந்தார். இந்த வழக்கில் தொடர்புடைய முகமது தல்கா (25), முகமது அசாருதீன் (23), முகமது ரியாஸ் (27), பரோஸ் இஸ்மாயில் (27), முகமது நவாஸ் இஸ்மாயில் (26), அப்சர்கான் ஆகிய ஆறு பேரை தனிப்படை போலீசார் கைது செய்தனர்.

அவர்களிடம் போலீசார் நடத்திய விசாரணையில், தீபாவளியையொட்டி மிகப்பெரிய நாச வேலைக்கு திட்டமிட்டது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து, இந்த வழக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி என்.ஐ.ஏ., விடம் ஒப்படைக்கப்பட்டு, தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், கோவை சம்பவத்தில் சிறப்பாக விசாரணை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட காவலர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று (31ம் தேதி) பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கோவையில் கடந்த 23ம் தேதி அதிகாலை உக்கடம் காவல் நிலையஎல்லைக்குட்பட்ட பகுதியில் கார் சிலிண்டர் வெடித்த சம்பவத்தை அடுத்து, விரைந்து செயல்பட்ட காவல்துறையினர் அவ்விடத்தில் தடயங்கள் ஏதும் கலைக்கப்பட்டு விடாமல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சம்பவம் நடந்த அன்று அதிகாலை வேளையில் அப்பகுதியில் விழிப்புடன் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினரை கண்டவுடன் ஜமேஷா முபீனால் மேலும் அவ்வழியே தொடர்ந்து காரைச் செலுத்த இயலவில்லை. தொடர்ந்து அவ்விடத்திலேயே கார் சிலிண்டர் வெடித்து அவரும் உயிரிழந்தார்.

தொடர்ந்து நடத்தப்பட்ட தீவிர விசாரணையின் காரணமாகவும், காவல்துறையினர் விழிப்புடன் பணியாற்றியதன் காரணமாகவும் பெரும் அசம்பாவிதம் கோவை மாநகரில் தவிர்க்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற 12 மணி நேரத்திற்குள் தனிப்படைகள் மூலம் புலன் விசாரணை முடுக்கி விடப்பட்டு 148தடயங்கள் சேகரிக்கப்பட்டு, வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு, அச்சம்பவம் தொடர்பாக ஐந்து பேர் 24ம் தேதி அன்றே கைது செய்யப்பட்டனர். மறுநாள் ஆறாவது நபரும் கைது செய்யப்பட்டார். காவல்துறையினரின் இப்பணியைப் பாராட்டி அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் முதல்வர் மு.க. ஸ்டாலின், கோவை மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட 58 காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கும் அடையாளமாக 14 காவல்துறையினருக்கு பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர்கள்**

இதற்கிடையே, முதல்வர் மு.க.ஸ்டாலின்ல சென்னை தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பத்திரிகைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற 41 பத்திரிகையாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.10,000 ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணைகளை வழங்கும் அடையாளமாக ஏழு ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு இன்று (31ம் தேதி) ஆணைகளை வழங்கினார்.

# Police personnel involved in blast probe felicitated



**Due recognition:** Chief Minister M.K. Stalin with police personnel who were felicitated at the Secretariat in Chennai on Monday. SPECIAL ARRANGEMENT

**The Hindu Bureau**
CHENNAI

Chief Minister M.K. Stalin felicitated 58 police personnel, including Coimbatore Police Commissioner V. Balakrishnan, who were involved in the investigation into the car blast case.

The event took place at the Secretariat in Chennai.

Following the car explosion within the Ukkadam police station limits in Coimbatore on October 23, the police ensured that the evidence at the site was not disturbed, an official press release said.

On the day of the incident, Jameesha Mubin (the suspect who was killed in the blast) "could not drive his car further after noticing that vigilant police personnel were involved in patrolling. Eventually, he died in the explosion on the same spot", the press release added.

### Prompt action

"A major untoward incident was prevented in Coimbatore city due to the thorough investigation into the incident and the vigilant patrolling of the police...The prompt action of the police quelled the actions of a few individuals attempting to create panic with an ulterior motive, and ensured that commercial establishments and the general public in Coimbatore were not affected during Deepavali," it said.

Within 12 hours of the incident, special teams were formed to help with the investigation, which collected 148 pieces of evidence and seized explosive materials and arrested six persons in connection with the incident, it said.

The Chief Minister also issued orders granting pension to journalists. The orders were for a monthly pension of ₹10,000 from the Directorate of Information and Public Relations to 41 retired journalists.



சென்னை தலைமைச்செயலகத்தில், கோவை மாநகரில் நடந்த கார் வெடிப்பு சம்பவத்தில் சிறப்பான புலன் விசாரணை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட கோவை மாநகர காவல்துறையினரின் நற்செயலை பாராட்டி, அவர்களை சிறப்பிக்கின்ற வகையில் 58 காவல் அலுவலர்கள்-காவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கிடும் அடையாளமாக 14 காவல்துறையினருக்கு பாராட்டு சான்றிதழ்களை, முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். அருகில் தலைமைச்செயலாளர் இறையன்பு, காவல்துறை தலைமை இயக்குநர் செ.சைலேந்திரபாபு மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கோவை சம்பவத்தில் சிறப்பான விசாரணை நடத்திய

# காவலர்களுக்கு பாராட்டு சான்றிதழை வழங்கினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, , நவ. 01-

கோவை சம்பவத்தில் சிறப்பாக விசாரணை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட 58 காவலர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "கோவை மாநகரில் கடந்த 23.10.2022 அன்று அதிகாலை உக்கடம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கார் சிலிண்டர் வெடித்த சம்பவத்தினையடுத்து, விரைந்து செயல்பட்ட காவல்துறையினர் அவ்விடத்தில் தடயங்கள் ஏதும் கலைக்கப்பட்டுவிடாமல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

சம்பவம் நடந்த அன்று அதிகாலை வேளையில் அப்பகுதியில் விழிப்புடன் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினரைக் கண்டவுடன் ஜமேஷா முபினால் மேலும் அவ்வழியே தொடர்ந்து காரைச் செலுத்த இயலவில்லை. இதனைத் தொடர்ந்து அவ்விடத்திலேயே கார் சிலிண்டர் வெடித்து அவரும் உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தீவிர விசாரணையின் காரணமாகவும், காவல்துறையினர் விழிப்புடன் பணியாற்றியதன் காரணமாகவும் பெரும் அசம்பாவிதம் கோவை மாநகரில் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஒரு சில நபர்கள் உள்நோக்கத்துடன் பதற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை காவல்துறையினரின் சிறப்பான நடவடிக்கைகளின் காரணமாக தடுக்கப்பட்டு, தீபாவளி பண்டிகையையொட்டி கோவையில் வணிக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் இயல்பு நிலைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் நிலைமை திறம்பட கையாளப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற 12 மணி நேரத்திற்குள் தனிப்படைகள் மூலம் புலன் விசாரணை முடுக்கிவிடப்பட்டு 148 தடயங்கள் சேகரிக்கப்பட்டு, வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு, அச்சம்பவம் தொடர்பாக ஐந்து பேர் 24.10.2022 அன்றே கைது செய்யப்பட்டனர். மறுநாள் ஆறாவது நபரும் கைது செய்யப்பட்டார். மேலும், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (UAPA) கீழும் நடவடிக்கைகள் அடுத்த தினமே (25.10.2022) மேற்கொள்ளப்பட்டன.

இரவும் பகலும் ஓய்வின்றி தன்னலமற்ற வகையில் பணியாற்றி வரும் தமிழ்நாடு காவல்துறையினரின் பணி போற்றத்தக்கதாகும். அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமையாற்றி சமூக அமைதியை நிலைநாட்டும் வண்ணம் சேவையாற்றிய காவல்துறையினரின் இப்பணியைப் பாராட்டி அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் உள்ளிட்ட 58 காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கிடும் அடையாளமாக 14 காவல்துறையினருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்." இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.




## கோவை கார் வெடிப்பு சம்பவம்

# சிறப்பான விசாரணை: 58 போலீசாருக்கு ஸ்டாலின் சான்றிதழ்

## 12 மணி நேரத்துக்குள் 148 தடயங்கள் சேகரிப்பு

## விழிப்புடன் பணியாற்றியதால் அசம்பாவிதம் தவிர்ப்பு

**சென்னை, அக்.31–**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (31–ந் தேதி) தலைமைச் செயலகத்தில், கோயம்புத்தூர் மாநகரில் நடந்த கார் வெடிப்பு சம்பவத்தில் சிறப்பான புலன் விசாரணை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட கோயம்புத்தூர் மாநகர காவல்துறையினரின் நற்செயலைப் பாராட்டி அவர்களை சிறப்பிக்கின்ற வகையில் 58 காவல் அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கிடும் அடையாளமாக 14 காவல்துறையினருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

கோவை மாநகரில் கடந்த 23.10.2022 அன்று அதிகாலை உக்கடம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கார் சிலிண்டர் வெடித்த சம்பவத்தினையடுத்து, விரைந்து செயல்பட்ட காவல்துறையினர் அவ்விடத்தில் தடயங்கள் ஏதும் கலைக்கப்பட்டுவிடாமல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

### அசம்பாவிதம் தவிர்ப்பு

சம்பவம் நடந்த அன்று அதிகாலை வேளையில் அப்பகுதியில் விழிப்புடன் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த காவல்துறையினரைக் கண்டவுடன் ஜமேஷா முபினால் மேலும் அவ்வழியே தொடர்ந்து காரைச் செலுத்த இயலவில்லை. இதனைத் தொடர்ந்து அவ்விடத்திலேயே கார் சிலிண்டர் வெடித்து அவரும் உயிரிழந்தார். அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தீவிர விசாரணையின் காரணமாகவும், காவல்துறையினர் விழிப்புடன் பணியாற்றியதன் காரணமாகவும் பெரும் அசம்பாவிதம் கோவை மாநகரில் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஒரு சில நபர்கள் உள்நோக்கத்துடன் பதற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை காவல்துறையினரின் சிறப்பான நடவடிக்கைகளின் காரணமாக தடுக்கப்பட்டு, தீபாவளி பண்டிகையையொட்டி கோவையில் வணிக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் இயல்பு நிலைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் நிலைமை திறம்பட கையாளப்பட்டது.

### 148 தடயங்கள் சேகரிப்பு

சம்பவம் நடைபெற்ற 12 மணி நேரத்திற்குள் தனிப்படைகள் மூலம் புலன் விசாரணை முடக்கிவிடப்பட்டு 148 தடயங்கள் சேகரிக்கப்பட்டு, வெடிப்பொருட்கள் கைப்பற்றப்பட்டு, அச்சம்பவம் தொடர்பாக ஐந்து பேர் 24.10.2022 அன்றே கைது செய்யப்பட்டனர். மறுநாள் ஆறாவது நபரும் கைது செய்யப்பட்டார். மேலும், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழும் நடவடிக்கைகள் அடுத்த தினமே (25–ந் தேதி) மேற்கொள்ளப்பட்டன.

### இரவு பகல் ஓய்வின்றி...

இரவும் பகலும் ஓய்வின்றி தன்னலமற்ற வகையில் பணியாற்றி வரும் தமிழ்நாடு காவல்துறையினரின் பணி போற்றத்தக்கதாகும்.

அர்ப்பணிப்பு உணர்வுடன் கடமையாற்றி சமூக அமைதியை நிலைநாட்டும் வண்ணம் சேவையாற்றிய காவல்துறையினரின் இப்பணியைப் பாராட்டி அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையர் வி.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட 58 காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கிடும் அடையாளமாக 14 காவல்துறையினருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு, காவல் துறை தலைமை இயக்குநர் செ. சைலேந்திர பாபு மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.